

# க்ருஷ்ணப்ரியே!

- மஹாரண்யம் ஶ்ரீ ஶ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

"ப்ரேமை" என்கிற சொல்லே மிகவும் அழகானது; இனிமையானது. இந்த சொல்லை உச்சரிக்கும்பொழுதே நம்முடைய இதயத்தில் அது கொண்டு வரும் ஒரு ரசாயனம் (Chemistry) எவ்வளவு இனிமையாக உள்ளது! ஆனால் அதை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியுமோ? முடியாது.

ப்ரும்மம் என்பது இந்திரியம், மனது, அறிவு இவைகளுக்கு எட்டாதது என்பது சாஸ்திர நிர்ணயம். அத்தகைய ப்ரும்மத்தை அறிவதற்குகூட ஶ்ரீவேதவியாசர் ப்ரும்மசூத்ரம் எழுதி இருக்கிறார். கண்களுக்கு தெரியாமல் உடலில் இருக்கக்கூடிய நாடிகளுடைய சலனங்களை அறிந்து, அதை யோகசக்தியால் சிரசில் அடித்து, யோகத்தின் உச்சநிலையை அடைவது குறித்து, பதஞ்சலியும் யோகசூத்ரம் எழுதி இருக்கிறார். கர்மகாண்டங்களை பற்றி கேட்கவே வேண்டாம். ஆபஸ்தம்பர், போதாயனர் போன்றவர்கள் அதற்கும் சூத்ரம் எழுதி வைத்து இருக்கிறார்கள். சாண்டில்யர், நாரதர் போன்றோர் பக்தி சூத்ரம் எழுதி இருக்கிறார்கள். ஆனால் ப்ரேமசூத்ரம் யாரும் எழுதவில்லையே! ஏன்? அந்த ப்ரேமை என்பது அனிர்வசனீயமானது. பக்திசூத்ரத்திலே "அந்த பக்தி என்பது ப்ரேமமயமானது" என்பது புரிகின்றது எனக்கு. ஆனாலும் அந்த ப்ரேமைக்குரியவன் யார்?

அதை நிர்ணயம் செய்யவேண்டும் அல்லவா? சரணாகதி சாஸ்திரத்திலே, சரணாகதனுடைய லக்ஷணங்கள் எவ்வளவு முக்கியமோ, அந்த சரணாகதி யாரிடம் செய்யவேண்டியது என்பதும் அவ்வளவு முக்கியம். ப்ரேமமயமானதே பக்தி என்பதில் ஆட்சேபணையே இல்லை. ஆனால் யாரிடம் அந்த ப்ரேமையை செலுத்தவேண்டும்? யார் மீது ப்ரேமையை வைக்கின்றோமோ அவர் அந்த ப்ரேமையை மதிக்கவேண்டும்; அதை கௌரவிக்கவேண்டும்; அதை ரசிக்க கூடியவராக இருக்கவேண்டும்; ரசித்து ப்ரேமையை மேலும் வளர்க்கவேண்டும். அப்படிப்பட்ட ஒருவரிடம்தான் ப்ரேமையை வைக்கவேண்டும் அல்லவா?

முதலில், “தனக்கு மேலே ஒரு சக்தி இருக்கிறது” என பக்தி செய்பவர்கள் பலர் உள்ளனர். அடுத்தபடியாக “எல்லா மதமும் ஒன்றுதான்; எல்லாம் ஒரே கடவுளை நோக்கியே அழைத்து செல்கின்றன” என சொல்லக்கூடிய பக்தர்களும் பலர். சிலர் கிராமதேவதைகள் உட்பட பல தெய்வங்களை வழிபடுபவர்கள். சிலர் கோள்களையே உபாசித்து கொண்டிருப்பவர்கள். சிலரோ வேதத்தில் உள்ள இந்திரன், அக்னி, வாயு போன்ற தெய்வங்களை உபாசிக்கக்கூடியவர்கள். வேதோக்தமான தெய்வங்கள் என சங்கரர் ஸ்தாபித்த ஷண்மத தெய்வங்களான கணபதி, முருகன், சூரியன், அம்பாள், விஷ்ணு, சிவன் என வழிபட்டு, உபாசிக்கக்கூடியவர்கள் சிலர். அதையும் சுருக்கி தேவி, விஷ்ணு, சிவன் என ரத்னத்ரயம் என வழிபடும் பக்தர்கள் சிலர். அதிலும் சிலர் விஷ்ணு பக்தர்கள். அதிலும் விஷ்ணுவை தந்திரம், யந்திரம் இவற்றினால் ஆராதனை செய்யாமல் கதாசிரவணம், பாராயணம், நாமசங்கீர்த்தனம் இவற்றால் ஆராதனம் செய்பவர்கள் சிலர். அந்த கதாசிரவணம், நாமசங்கீர்த்தனம் இவற்றையும் விஷ்ணுவின் பிற அவதாரங்களை குறித்து செய்யாமல், க்ருஷ்ணனைக் குறித்தே செய்பவர்கள் மிகச்சிலரே. அந்த க்ருஷ்ணனிடமும் சாந்த பாவம், தாஸ்ய பாவம் என்றும் இல்லாமல் வாத்சல்ய (கண்ணனையே தன் குழந்தையாக பாவிப்பது), சக்ய (கண்ணன் என் ஆருயிர் தோழன் என பக்தி செய்வது), சிருங்கார (கண்ணனை தன் ப்ராண நாயகனாக நேசிப்பது) பாவங்களில் ப்ரேமபக்தி செய்ய கூடியவர்கள் மிக மிக சிலரே.

ஆம்! ப்ரேமை என வந்துவிட்டால் அதை யாரிடம், எப்படி, எந்த பாவனையில் செய்யவேண்டும் என்பதும் முக்யம். அந்த ப்ரேமைக்குரியவன் க்ருஷ்ணனே. என்னைக் கேட்டீர்களானால், அந்த ப்ரேமைக்குரிய உத்தமமான பாவம் சிருங்கார பாவமே.
பக்தி துர்லபமானதுதான். அதிலும் பல தெய்வங்களை காட்டிலும் க்ருஷ்ணனிடம் பக்தி வருவது துர்லபமானது. அதிலும் துவாரகா க்ருஷ்ணர், மதுரா க்ருஷ்ணர் என்றில்லாமல் ப்ருந்தாவன க்ருஷ்ணரிடம் பக்தி வருவது இன்னும் துர்லபம். அதிலும் பாலக்ருஷ்ணனிடம் என்று இல்லாது முரளீதரனாக இருக்கக்கூடிய க்ருஷ்ணனிடம் பக்தி வருவது துர்லபத்திலும் துர்லபம்.

இந்த சிருங்கார பாவ ப்ரேமை மிகவும் லலிதமானது. ஒரு ரோஜாப்பூ இதழை தடவினால் என்ன மென்மையான உணர்வு வருமோ அதைவிட மென்மையானது இந்த ப்ரேமை. அதிகாலையில் புல்லில் மலர்ந்திருக்கும் பனித்துளியை தொட்டாலே அது மறைந்துவிடும். அந்த பனித்துளியைவிட மென்மையானது ப்ரேமை. ஒரு மலர்ந்த தாமரையை நுகர்ந்தால் ஒரு தெய்வீக, சுகமான மணம் வருகிறதே அதைவிட மென்மை இந்த ப்ரேமை. பல வர்ணங்கள் கொண்ட அழகிய மயிலிறகை தடவினால் அதில் கிடைக்கும் சுகமான மென்மையான உணர்வைவிட சுகமானது, மென்மையானது இந்த ப்ரேமை. வானத்தில் சிலசமயம் ஒரு வானவில் பலவர்ணமுடன் தோன்றி கண்ணாமூச்சிக் காட்டி மறைகிறதே, அதைவிட இனிமையானது இந்த ப்ரேமை. பசுவின் முகத்திலும் மானின் முகத்திலும் நிரந்தரமாக குடி கொண்டிருக்கும் சாந்தத்தை விட மிக இனிமையானது இந்த ப்ரேமை.

இந்த ப்ரேமைக்கு அடிப்படை என்ன தெரியுமா? தியாகம்; காரணமில்லாத தியாகம்; எதையும் எதிர்பார்க்காத ஒரு தியாகம். அத்தகைய ஒரு தியாகத்தின் அடிப்படையில்தான் இந்த ப்ரேமை இருக்கின்றது.

மகாலக்ஷ்மியை, சந்தானலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, தனலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, வித்யாலக்ஷ்மி என்றெல்லாமும், மோக்ஷலக்ஷ்மி என்றும்கூட சொல்வார்கள். ஆனால் அந்த லக்ஷ்மியிடம் ஒரு ப்ரேமலக்ஷ்மியை சொல்லவில்லையே? என்ன காரணம்? ப்ரேமை என்பது அதையும் தாண்டி உள்ளதோ? ஸ்ரீஸ்ரீ அண்ணா ஸ்ரீ ராதைக்கு இருபது இனிய நாமங்களால் ஒரு அர்ச்சனை செய்கின்றார். அதில் சொல்லும்பொழுது “லக்ஷ்மி லக்ஷாதிக லாவண்யாயை நமோ நம:” என்கிறார். மகாலக்ஷ்மியைவிட லக்ஷம் மடங்கு அதிக அழகு உடையவள் நம் ஸ்வாமினியான ஸ்ரீ ராதை என்கிறார். ‘அதைவிட’ என அர்த்தம் பொருந்தும். இந்த மகாலக்ஷ்மியைவிட ஆயிரம் மடங்கு, லக்ஷம் மடங்கு அன்பு உடையவள் ராதை. இந்த ராதையைப்பற்றி பேசும்பொழுது சிலரைப் பற்றி ஸ்மரித்தால், அந்த ராதையின் அருள் சுலபமாக கிடைக்கும்.

யாரை ஸ்மரிப்பது? பாகவதத்திலுள்ள கோபிகைகளைத்தான். கோபிகைகளுடைய பக்தி அத்தகையது. உங்களுக்கு புரிந்தால் புரியட்டும்; நல்லது; புரியாவிட்டாலும் பரவாயில்லை. இதயத்தில் இருப்பதை சொல்லித்தானே ஆகவேண்டும்? எல்லோரும் “God is perfect. Whatever comes from him is also perfect. Perfection will never produce imperfection” என்பார்கள். கடவுள் முழுமையானவர். அவரிடமிருந்து குறையான ஒன்று வரவேவராது.

கோபிகைகள் கண்ணனை தன்னுடன் இருக்கும் ஒரு சிறுவனாக பார்க்கவில்லை. கண்ணன் பரம்பொருள்; இவன் பகவான் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனால்தான் அவர்கள் கோபிகாகீதம் முதலியவற்றில் சொல்கையில் “நகலுகோபிகா நந்தனோ பவான்; அகில தேகினாம் அந்தராத்மத்ருக்” என ஒரு வேதாந்த வார்த்தையை சொல்கிறார்கள். “சர்வஜீவராசிகளிடம் த்ருக் ஸ்வரூபமாக இருக்கக்கூடிய அந்த ஆத்மஸ்வரூபமான நீ…” என சொல்கிறார்கள். “விகனசார்த்திதோ விஸ்வகுப்தயே” என்கிறார்கள். ப்ரும்மாவின் பொருட்டு பூமியின் மேலுள்ள கருணையால் பூபாரத்தை குறைக்க அவதாரம் செய்திருக்கிறாய் என்கிறார்கள். அப்பேர்ப்பட்ட கோபிகைகளிடம் பகவான் “உங்களுடைய வஸ்திரங்களை எல்லாம் கொடுத்துவிடுங்கள்” என்றால்கூட, கொடுத்துவிடுகிறார்கள். ஏனென்றால் அவன் பூர்ணமானவன். பூர்ணமானவனது செயல் எல்லாமே சரியாகத்தானே இருக்கும்? Perfection will never produce imperfection. அவன் எதை சொல்கின்றானோ அதை அப்படியே கேட்க வேண்டியது. அப்பொழுதுதான் நாம் அவனை பகவான் என ஏற்றுக்கொண்டு, அவனை உண்மையாக உணர்ந்ததாக ஆகும் அல்லவா!

"பகவான் இப்படி செய்யலாமா?" என்றால், இதில் என்ன இருக்கிறது? நான் எவ்வளவோ மகான்களின் சரித்திரங்களை படித்து இருக்கிறேன். அவர்கள் தன்னிடம் வரும் சீடனை பார்த்து, மலையிலிருந்து குதி என்றுகூட சொல்வார்கள். அவனும் குதித்து இறந்துபோவான். இறந்த அவனை எடுத்து வந்து, உயிர்தந்து, சீடனாக வைத்துக்கொள்வார்கள். அதுபோல ஒரு குழந்தையை தூக்கி கிணற்றில் கூட போட்டுவிடுவார்களாம். சிறிது நேரம் கழித்து அந்த குழந்தையை பெயர் சொல்லிக் கூப்பிடுவார்களாம். அந்த குழந்தையும் உயிருடன் வந்துவிடும். இதெல்லாம் அந்தந்த மகாத்மா மீது அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்களா என்று பார்க்கத்தானே? ஆனால் பகவான் க்ருஷ்ணனோ இங்கு கோபிகைகளை அப்படி தன்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்களா என பரீக்ஷிக்கவில்லை.

அவர்கள் எவ்வளவு நம்பிக்கை தன்மீது வைத்திருந்தார்கள் என்பதை உலகிற்கு காட்டுவதற்காகத்தான் இதை எல்லாம் செய்கின்றான். கோபிகைகள் அத்தகைய நம்பிக்கை உடையவர்களா, இல்லையா என்பதில் பகவானுக்கு சந்தேகம் இல்லை.

மேலும் நான் கண்ணனை குழந்தையாக நினைத்து பக்தி செய்கிறதாக இருந்தால் அவன் என் பின்னே ஓடி வருகின்றான்; கட்டி கொள்கின்றான்; "அம்மா முத்தம் தா; பசிக்கிறது; சாதம் ஊட்டு" என்கின்றான். என் காலை கட்டி கொள்கின்றான். நான் அவனை குளிப்பாட்டிவிடுகின்றேன். அவனுக்கு ஆடை அணிவித்து அலங்கரிக்கின்றேன். இதெல்லாம் உங்களுக்கு புரிகிறது. ஏனென்றால் நான் தாயாக ஆகிவிட்டால், அவன் குழந்தை. குழந்தையாக இருக்கையில் அது விஷமம் செய்வதும், அதை அதட்டுவதும் மிரட்டுவதும், அது கொஞ்சுவதும், கெஞ்சுவதும், அழுவதும், சிரிப்பதும், அதைக் குளிப்பாட்டுவதும், அலங்கரிப்பதும் முத்தமிடுவதும், அணைத்து கொள்வதும் ஒரு தாயாருக்கே உரியதுதானே! இதை எல்லாம் நாம் ரசிக்கின்றோம்.

பகவானை நான் தோழனாக எடுத்துக்கொண்டால், "பகவான் என் கையை பிடித்துக்கொண்டு வீதியில் நடந்தான். என்னை பார்த்து இந்த காரியம் செய்யலாமா, வேண்டாமா என ஆலோசனை கேட்டான். நான் எனது மனதில் எழும் சந்தேகங்களை அவனிடம் சொன்னேன். நானும் பகவானும் சேர்ந்து படுத்துக்கொள்வோம். சேர்ந்து உண்போம். சமயத்தில் அவனது ஆடைகளை நான் அணிந்து கொள்வேன்." இப்படி இருக்கக்கூடிய சக்ய, தோழ பாவமும் நன்றாக இருக்கின்றது. நமக்கு நன்றாக புரியவும் செய்கின்றது.

அதேபோல் தாஸ்ய பாவமோ, எப்பொழுதும் கைகட்டி வாய்பொத்தி சுத்தமாக ஆடைவுடுத்தி, அவன்முன் மரியாதையாக பணிவுடன் நின்று, நமக்கு என்ன கைங்கரியத்தை கொடுப்பானோ, என்ன சொல்வானோ என காத்திருந்து, அது கிடைத்தவுடன் அதை ஆசையாக செய்து, அதிலேயே ஆனந்தப்பட்டிருக்கக்கூடிய ஒன்று. “இந்த ஆசனத்தை எடுத்து வா; பருக நீர் கொடு; இந்த கடிதத்தை இவரிடம் கொடுத்து விட்டு வா; அதோ அவர் என்ன சொல்கிறார் என கேட்டு வா; இதோ இன்னாருக்கு உடல்நலம் சரியில்லை போய் பார்த்து நான் விசாரித்ததாக சொல்லி விவரமறிந்து வா” இப்படி சிற்சில வேலைகளை, நம்மையும் ஒரு பொருட்டாக மதித்து பகவான் சொன்னானே என நினைத்து, அவன் தரும் ஏவல்களை குஷியாக மகிழ்வுடன் செய்வதே கைங்கரிய-தாஸ்ய பாவம்.

அப்படியெனில் சிருங்காரபாவம் என்றால் என்ன? இது சாஸ்திரத்தால் அங்கீகரிக்கப்பட்டது. "கண்ணன் என்னை அணைத்து கொண்டான், முத்தம் கொடுத்தான், கண்ணன் எப்பொழுது வருவானோ என ஏங்கிக்கொண்டு இருந்தேன். அவனுடன் கைகோர்த்து ஆடினேன். அவன் வரவில்லை என்று எனக்கு கோபம் வந்தது" என்றெல்லாம்தான், அப்படி பக்தி செய்வோர் சொல்வார்கள். எப்படி வாத்சல்ய, சக்ய, தாஸ்ய பக்திகளில் அந்தந்த பாவ லீலைகள் சொல்லப்படுகிறதோ, அப்படித்தானே சிருங்கார பாவமான காதலன் -காதலிக்கு இடையே உள்ள பாவனைகள் இருக்கும்? அதிலுள்ளும் ஏக்கம், கோபம், தாபம் எல்லாம் இருக்கத்தானே செய்யும். ஏனெனில் இப்படி எல்லாம் காதலன் காதலிக்கு இடையே இருக்கும் உணர்வுகளும், பழகுதலும் இல்லை எனில் அது சிருங்கார பாவமே இல்லை. உனக்கு புரிந்தால் நல்லது. புரியாவிட்டால் பாகவதத்திலுள்ள ஐந்து ராஸ அத்யாயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மற்ற உனக்கு புரிகிற அத்யாயங்களை படித்து கொண்டு வா! இது உனக்கு போதும். அது உயர்ந்தது என்பதாலேயே அது புரியாததுதான்.

புரியாதது என சொல்லிவிட்டு ஏன் பேசுகிறீர்கள் என்றால், சொல்வேன். 'குறிஞ்சி மலர்' என ஒன்று பனிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறைதான் பூக்கும். அது பூக்கும்பொழுது நாம் அருகில் இருக்கப்போவதில்லை. அது எங்கு இருக்கும் என்றும் தெரியாது. ஆனால்,'இப்படி பனிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் அபூர்வ மலர் இந்த குறிஞ்சி' என தெரிந்து வைத்துக்கொள்வதில் என்ன தவறு? அது ஓர் அபூர்வ விஷயமல்லவா!

சகோரபக்ஷி என ஒரு பறவை இருக்கின்றது. சந்திரனிடமிருந்து வரும் கிரணங்களை எதிர்பார்த்து அதன் வரவுக்காகவே ஏங்கிக்கொண்டே இருக்குமாம் அப்பக்ஷி. அப்படி ஒரு பறவை இருந்தது என்றாவது தெரிந்து வைத்து கொள்வோமே. அவ்வாறே சாதகபறவை என்று ஒன்று. அது மேகத்தின் நீரை மட்டுமே அருந்துமாம். அப்படிப்பட்ட அபூர்வ ரகங்கள்தான் ஹம்ஸ பக்ஷி, கவரிமான் போன்றவைகளும். இவற்றை எல்லாம் நாம் பார்க்கத்தான் போகிறோமா என்ன? இல்லைதானே! அதுபோல ஒரு உன்னத ப்ரேமை இருக்கின்றது என தெரிந்து வைத்துக்கொள்வோமே! நமக்கு வரட்டும், வராது போகட்டும்; ஆனால் தெரிந்து கொள்வோமே!

ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்களும் அழகாக இதை ஸ்ரீராதிகாவிலாஸசம்புவில் வர்ணிக்கிறார். எனக்கு மிகவும் பிடித்தமான அந்த சுலோகத்தைப்பற்றி இங்கு சொல்லி சந்தோஷப்படுகிறேன். ஒரு பயில்வான் இருக்கிறார். அவர் நூறு இருநூறு கிலோ எடையைக்கூட எளிதாக தூக்கிவிடுவார். எவ்வளவு பெரிய இரும்பு பாரமாக இருந்தாலும் தூக்கிப்போட்டு விளையாடுவார். பெரிய தண்டால், பஸ்கி எல்லாம் அனாயாசமாக செய்வார். அவ்வளவு பெரிய பலவான். ஆனால் அவரிடம் போய் ஒரு அழகிய மலரை கொடுத்து, “இவ்வளவு பெரிய பயில்வானாக இருக்கிறீர்களே! இந்த மலரிலிருக்கும் தேனை எடுத்து எனக்கு கொடுங்கள்” என சொன்னால் அவரால் செய்யமுடியுமா? தடியால் அடித்தாலோ கசக்கி பிழிந்தாலோ அதிலிருந்து தேனை எடுக்க முடியுமா? அந்த பூவிலிருந்து தேனை எடுக்க ஒரு தேனீயால்தான் முடியும். அந்த தேனீக்குத்தான் அந்த ரகசியம் தெரியும்.

**शूरोपि धीरोपि वने सुमेभ्यो**
**न शक्नुयात्तन्मधु सङ्ग्रहीतुम् ।**
**माहात्म्यमेवं ननु राधिकाया**
**वेत्तुं न शक्नोति विशारदोपि ॥श्रीराधिकाविलासचम्पूग्रन्थः ३-२५॥**
ஶூரோபி தீ4ரோபி வனே ஸுமேப்4யோ
ந ஶக்னுயாத்தன்மது4 ஸங்க்3ரஹீதும் ।
மாஹாத்ம்யமேவம்’ நனு ராதி4காயா
வேத்தும்’ ந ஶக்னோதி விஶாரதோ3பி ॥ஸ்ரீராதி4காவிலாஸசம்பூக்3ரந்த2: 3-25॥

ஆக அதுபோல மீமாம்சா, தர்க்கம், நியாயம் என பல பெரிய சாஸ்திரங்களை படிக்கலாம்; எல்லாம் நல்லதுதான். ஆனால் அதை எல்லாம் படித்ததினால் உங்களுக்கு இந்த ப்ரேம பாவம் புரியும் என சொல்லமுடியுமோ? இது ப்ரியர்களுக்கே, ரசிகர்களுக்கே, ஏன்? ராதையின் அனுக்ரஹம் இருக்கக்கூடியவர்களுக்கே புரியக்கூடியது. இத்தகைய கோபிகைகளைப்பற்றி நினைக்காமல் நான் ப்ரேமையைப் பற்றி எழுதத்தான் முடியுமா? அல்லது எனக்கு அப்படிப்பட்ட ப்ரேம சிந்தனை இதயத்தில் சுரக்கத்தான் செய்யுமா?

நம் நாட்டில் ஒரு வழக்கம் உண்டு. ஒருவன் மிக மேதாவியாக இருந்து நிறைய பேசினால், "நீ என்ன ப்ருஹஸ்பதியா?" என கேட்போம். காரணம், ப்ருஹஸ்பதியைப்போல மேதாவி, புத்திமான் யாரும் இல்லை.

ஸ்ரீராமாயணத்தில் வால்மீகி கூட ஸ்ரீராமரின் புத்திசாலித்தனத்தை சொல்லும்போது, ஸ்ரீராமர் ப்ருஹஸ்பதியைப்போல புத்திசாலி என்கிறார். அப்பேர்ப்பட்ட ப்ருஹஸ்பதியிடம் பாடம் படித்தவன் உத்தவன். அவன் தன்னை “நான் ப்ருஹஸ்பதி சிஷ்யன்” என்று சொல்லிக்கொள்வான். ஆனால் கண்ணனை பார்த்த பிறகு தன்னை அவன் “கண்ணனின் மந்திரி” என சொல்லிக்கொள்பவன் ஆனான். ப்ருஹஸ்பதி சிஷ்யன் என்றது பழைய காலமாகிவிட்டது! 'கண்ணனின் மந்திரி' என அவன் சொல்லிக்கொண்டதும் அவன் கோபிகைகளைப் பார்க்கும் வரையில்தான். கோபிகைகள் மழைக்குக்கூட பள்ளிக்கூடத்தில் ஒதுங்கியவர்கள் அல்லர். அவர்களுக்கு ஒரு அக்ஷரம்கூட எழுத தெரியுமா என தெரியவில்லை; தர்க்கம், மீமாம்சா வேதாந்தம் நியாயம் எதுவும் தெரியாது. ஏன்? சாஸ்திரம் எனும் வார்த்தைகூட தெரியாது. ஆனால் சாஸ்திரத்திலே கரைகண்டவனான சாக்ஷாத் ப்ருஹஸ்பதியிடமே பாடம் படித்தவனான அந்த உத்தவன்:

**वन्दे नन्दव्रजस्त्रीणां पादरेणुमभीक्ष्णशः।**
**यासां हरिकथोद्गीतं पुनाति भुवनत्रयम्॥ ६३॥**
வந்தே$^{3}$ நந்த$^{3}$வ்ரஜஸ்த்ரீணாம்’ பாத$^{3}$ரேணுமபீ$^{4}$க்ஷ்ணஶ:|
யாஸாம்’ ஹரிகதோ$^{2}$த்$^{3}$கீ$^{3}$தம்’ புனாதி பு$^{4}$வனத்ரயம்||10-47-63||

என்று சொல்லி, கோபிகைகளின் காலில் விழுந்தான். ஏன் காலில் விழுந்தான்? என்ன புரிந்து கொண்டான்? “என்னிடம் சாஸ்திரம் இருக்கிறது. அவர்களிடம் அதன் அனுபவம் இருக்கிறது. என்னிடம் புத்தகம் இருக்கிறது. அவர்களிடமோ அதில் சொல்லப்பட்டு இருக்கிற வஸ்து இருக்கிறது. நான் அறிவு பூர்வமாக தெரிந்துக்கொண்டதை, அனுபவபூர்வமாக அவர்கள் தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள்” என்கிறான். அறிவு என்பதே அனுபவம் வருவதற்குத்தானே? அதனால் அறிவை விட அனுபவம்தான் உயர்ந்தது.

பெரும்பாலும் பல பக்தர்கள், பள்ளிக்கூடத்துக்குச் சென்று பெரிதாக படித்தவர்கள் அல்லர். ஸ்ரீராமகிருஷ்ணராகட்டும், ஸ்ரீரமணராகட்டும் எல்லாம் பெரிதாக படித்தவர்களா என்ன? இல்லை. ஆனால் அனுபவஸ்தர்கள். இப்படி பல மகான்கள்.

அனுபவம் உயர்ந்தது என்பதால் கோபிகைகளின் கால்களில் விழ உத்தவன் தயங்கவில்லை. அதற்குப்பின் அவன் தன்னை "கோபிகைகளின் சிஷ்யன்" என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்பினான்.

உத்தவன் இப்படி ப்ரமிக்கிறானா? பீஷ்மர் அம்புபடுக்கையில் படுத்து இருக்கும்பொழுது ஒரு ஸ்துதி செய்கின்றார். அவர் செய்யும் துதியில் தனி சிறப்பு இருக்கிறது. அது என்ன சிறப்பு?

குந்தி செய்யும் ஸ்துதியில் “என் குடும்பத்தாரை எப்படியெல்லாம் காப்பாற்றினாய்! அரக்கு மாளிகையில் நெருப்பை வைத்தபொழுது காப்பாற்றினாயே! வனத்தில் எங்களுக்கு துன்பம் வந்தபொழுது எல்லாம், போரின்போதெல்லாம் காப்பாற்றினாயே!" என பலவிதமாக கண்ணன் காப்பாற்றினது எல்லாம் சொல்லி, "இந்தக் குலமே நீ பிறந்ததால்தான் பவித்ரம் அடைந்தது" என்கிறாள். அவள் செய்வது ஒரு கிருபா ஸ்மரணம். பெருமாளின் அருளால் சௌக்யமாக இருக்கும் ஒரு கிழவி, கோவிலுக்குச் சென்று பெருமாளை புகழ்ந்து வணங்குவதுபோல இருக்கிறது குந்தி துதி.

பீஷ்மரோ வீரர். அவர் சொல்லக்கூடிய துதி, அவருடைய க்ஷத்ரிய வாஸனையையே ப்ரதிபலிக்கிறது. "ராஜசூயயாகத்தில் பல ராஜாக்கள் முன் உனக்கு அக்ரபூஜை செய்தார்களே! அந்த க்ருஷ்ணனிடம் எனக்கு ரதி உண்டாகட்டும். யானைகள் பிளிற, குதிரைகள் கனைக்க, வீரர்கள் வீரகோஷம்போட, சங்குகள் முழங்க, முரசுகள் ஒலிக்க அதன் நடுவே உபநிஷத்தின் சாரமான பகவத்கீதையை யாரால் சொல்லமுடியும்?

அதை யுத்தகளத்தில் சொன்னாயே! அந்த க்ருஷ்ணா, உன்னிடம் எனக்கு ரதி உண்டாகட்டும். உன்னுடைய உடம்பில் அம்புகள்பட்டு ரத்தம் ஓட அதில் புழுதிபட்டு இருக்க, அதனுடனே சக்கரத்தை ஏந்திவந்தாயே அந்த க்ருஷ்ணனிடம் எனக்கு ரதி உண்டாகட்டும். இந்த பாண்டவ குலத்தவர் மீது ஏன் உனக்கு இவ்வளவு பக்ஷபாதம்? அத்தகைய உன்மீது எனக்கு ரதி உண்டாகட்டும்" என்றெல்லாம் சொல்கிறார். இப்படி சொல்லிக்கொண்டுவரும் பீஷ்மரின் ஒவ்வொரு சுலோகத்திலும், அவரது க்ஷத்ரிய வாசனைதான் தென்படுகிறது. ஆனால் கடைசியில் சம்பந்தமே இல்லாமல்,

**ललितगतिविलासवल्गुहास प्रणयनिरीक्षणकल्पितोरुमाना:।**
**कृतमनुकृतवत्य उन्मदान्धा: प्रकृतिमगन्किल यस्य गोपवध्व:॥४०॥**
லலிதக$^{3}$திவிலாஸவல்கு$^{3}$ஹாஸ ப்ரணயநிரீக்ஷணகல்பிதோருமானா:|
க்ரு’தமனுக்ரு’தவத்ய உன்மதா$^{3}$ந்தா$^{4}$: ப்ரக்ரு’திமக$^{3}$ன்கில யஸ்ய கோ$^{3}$பவத்$^{4}$வ:|| 1-9-40||

என சொல்வது கொஞ்சமும் அவருடைய துதியின் முந்திய வரிகளுடன் ஒன்றுபடவில்லை. தியான, கர்ம, பக்தி யோகங்கள் உண்டு. இந்த கோபிகைகளோ, கண்ணன் சாப்பிட்டதுபோல சாப்பிட்டு, அவன் பேசுவதுபோல் பேசி, அவன் உட்கார்ந்தாற்போல் அமர்ந்து, எழுந்தாற்போல் எழுந்து, நடந்தாற்போல் நடந்து, அவன் ரசித்தாற்போல் ரசித்து கடைசியில் அவர்கள் கண்ணனாகவே ஆகிவிட்டார்கள். "இதென்ன யோகம்?" என பீஷ்மர் கோபிகைகளைக் கண்டு வியக்கிறார். ஒருக்கால் தனக்கு மறுஜன்மம் என்று ஒன்று வருமாகில், அது இந்த ஜன்மத்து பீஷ்மராக யோகியாக இல்லாமல், ஒரு கோபியாகவே இருக்கவேண்டும் என்பதற்காக இப்படி தனது துதியின் கடைசியில் சொல்லி இருப்பாரோ என தோன்றுகிறது..

ஏனெனில், "உயிரை விடுகையில் எதை நினைத்துக்கொண்டு விடுகிறாயோ, அப்படியே மறுஜன்மத்தில் பிறப்பாய்" என பகவத்கீதையில் கண்ணனும் கூறுகின்றான்:

**यं यं वापि स्मरन्भावं त्यजत्यन्ते कलेवरम् ।**
**तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावित: ॥ ८-६॥**
யம் யம் வாபி ஸ்மரன்பா$^{4}$வம் த்யஜத்யந்தே கலேவரம் ।
தம்’ தமேவைதி கௌந்தேய ஸதா$^{3}$ தத்$^{3}$பா$^{4}$வபா$^{4}$வித: ॥ 8-6॥

ஒருகால் அதனால்தான் கோபிகைகளை பீஷ்மர் ஸ்மரித்தாரோ?

ஸ்ரீசுகர் ஜீவன்முக்தர்; திகம்பரராக திரிபவர்; யுவாவாக இருக்கிறார். ஆனால் அவரை பார்த்தவுடன் விவஸ்திரமாக இருக்கும் பெண்கள் ஓடி வந்து நமஸ்கரிக்கின்றனர். ஆனால் வயதில் முதிர்ந்த ஸ்ரீவியாசர் வந்தபொழுதோ தங்களது ஆடையை சரிசெய்து கொள்கின்றனர் என ஸ்ரீமத்பாகவதத்தில் வருகிறது. ஏன்? ஸ்ரீமத்பாகவதம் அனாவசியமாக ஒன்றை சொல்லாது. இது ஸ்ரீவியாசரை மட்டம் தட்டுவதற்காக சொல்லப்பட்டது அல்ல. ஸ்ரீவியாசரும் மிக பெரியவர்தானே! ஆக எதற்காக இந்த சம்பவம் ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லப்பட்டது?

எந்த ஸ்ரீசுகரை கண்டால் பெண்களுக்கும் ஸ்த்ரிபுருஷ பேதம் இல்லாதுபோனதோ அந்த ஸ்ரீசுகர்தான், ஸ்ரீமத்பாகவதத்தில் ராஸம் சொல்லவந்தார் என்பதை காட்டத்தான் இது சொல்லப்பட்டது. அதாவது நீ நினைக்கிறாற்போல கோபிகைகளின் கண்ணன் மேலான காதல் உலகத்தவரின் மையல் போன்றதல்ல. இது ஒருவிதமான தெய்வீகமான காதல். அது புரியவேண்டும் என்பதற்காக இந்த ஸ்ரீ வியாச-சுக சம்பவம் சொல்லப்படுகிறது.

சென்னை சம்ஸ்கிருத கல்லூரியில் ஸ்ரீமாதவன் என்று ஒருவர் இருந்தார். அஷ்டபதியை அழகாகப் பாடுவார். காஞ்சி பெரியவர் ஒருமுறை அவரை தன்முன் அஷ்டபதி பாடச் சொன்னார். அவர் கொஞ்சம் தயங்கினார். அதற்கு காஞ்சி பெரியவர் “இது என்ன சிருங்காரம் மிகுந்த இந்த அஷ்டபதியை பாடச் சொல்கிறாரே? இதை ஒரு சன்யாசி முன் எப்படிப் பாடுவது என யோசிக்கிறாயோ? நீ நினைக்கிறாற்போல உலக காமமில்லை அது. காமம் நசிந்து போன காமம் அது. பாடு” என்றார்! "காமம் நசிந்து போன காமம்" என்பது அழகான ஒரு வார்த்தை. எப்படி அழகாக பேசி இருக்கிறார்! ஸ்ரீமத்பாகவத ராஸபஞ்சாத்யாயீயின் பலனே இதுதான். வறுத்த பயிர் முளைக்காததுபோல கண்ணனிடம் காமம் வந்தால் உலககாமம் மறுபடி முளைக்காது என அர்த்தம். ஜடபரதர் ஜீவன்முக்தர்; ஞானி. அவர் சரித்ரத்தை படித்தால் யசஸ், கீர்த்தி, ஆயுள் வரும் என்ற பலன்களை சொல்கிறார் ஸ்ரீசுகர். ஆனால் கண்ணனின் ராசபஞ்சாத்யாயத்துக்கு “காமம் அழிந்து விடும்” என பலன் சொல்கிறார்.

ஆக, உத்தவன், பீஷ்மர், ஸ்ரீசுகர் என இப்படி எவ்வளவோ பக்தர்கள் கோபிகைகளைப் பார்த்து, பிரமித்துபோய் இருக்கிறார்கள். ஸ்ரீசங்கரரும் கோபிகைகளைப் பார்த்து வியக்கிறார்.

கோபிகைகள் வாழ்ந்தது புராணகாலம் என்றால் அன்னைமீரா வாழ்ந்ததோ சரித்ரகாலம். மீராவை போல் இன்னும் ஒருவரை பார்க்க முடியுமா? பிறந்ததிலிருந்து கடைசிவரை க்ருஷ்ண விரஹத்தினாலேயே துடித்த ஒரு அவதாரம். க்ருஷ்ண நாமம், அவன் தியானம், அவன் விரஹம், என காலம் முழுவதும் வாழ்ந்தாள் அவள். ஸ்ரீ ஸ்ரீ அண்ணா இதை 'துணைக்கு ஆளில்லாத பக்தி' என்பார். துணைக்கு யாரும் இல்லாதது என்பது மட்டுமில்லை. மீராவை சுற்றி இருந்தவர் அனைவரும் அவளிடம் விரோதமே பாராட்டினார்கள்; அவளுக்கு தொல்லை கொடுத்தார்கள். ராஜபுத்ர குடும்பங்களின் வாழ்க்கையை நினைத்து பார்க்கமுடியாது. மகாராணியால் வெளியே வந்து சுலபமாக தலைகாட்டக்கூட முடியாது. யாரிடமும் சுலபமாக பேசக்கூட முடியாது. அந்த சூழலிலும் அவள் ப்ரேமபக்தி செய்தாள். அவள் கணவன் ராணா ராஜா. அவன் என்ன சொன்னாலும் மீரா கேட்டுவந்தாள்; எல்லாவற்றையும் செய்வாள். ஆனால் தன்னை தொடமட்டும் அனுமதித்தது இல்லை; தனது க்ருஷ்ண பக்தியை அப்படி பவித்ரமாக வைத்திருந்தவள் அவள்; அதுவும், அந்த ராஜ சூழலில்! அவளது பவித்ரமான வாழ்க்கையே மிக ஆச்சரியமானது.

பல வீடுகளுக்கு நான் போகும்போது செராமிக்கில் (ceramic) செய்த மீராவை ஷோகேசில் வைத்திருப்பதை பார்ப்பேன்; வருத்தமாக இருக்கும் எனக்கு. "பூஜையறையில் வழிப்படவேண்டியவளை, ஷோகேசில் வைத்திருக்கிறார்களே!" இதில் ஆச்சரியமும் இல்லைதான். ஏனெனில் ப்ரேமபக்தி என்பது புரியாத ஒன்று. அது இதயத்தில் நுழைந்தால்தானே, அவள் பூஜை அறைக்குள் நுழைவாள்! அப்படிப்பட்ட அந்த மீராவைப்பற்றி ஸ்மரிக்காமல் எப்படி நான் கோபிகைகளைப்பற்றி பேசமுடியும்? அந்த சிந்தனைதான் எப்படி எழும் எனக்கு!

தமிழ்நாட்டில் ஆண்டாளும் இந்த ப்ரேமபக்தி லக்ஷணங்களை எல்லாம் ஒரே வரியில் அழகாக சுருக்கிச் சொல்லிவிட்டாள். “ஆர்க்கும் என்னோயிது அறியலாகாது” என்கிறாள். தலைவலி உடல்வலி என்றால் புரியும். "கடன் வாங்கி கஷ்டப்படுகிறேன்" என்றால் புரியும். ஏனெனில் இது எல்லார்க்கும் அனுபவத்தில் இருப்பது. ஆனால் ப்ரேமவிரஹம் என்பது எப்படி புரியும்?

நெற்றிக்கு இட்டு கொள்வது, துளசி மாலை போட்டுக்கொள்வது, நித்ய கர்மாக்களை செய்வது, பூஜை செய்ய உட்காருவது, ஹோமம் செய்வது- இது எல்லாம் உலகில் சகஜம். இது எல்லாம் வெளிப்படையான தர்மமாகும்.
இன்னும் சிலர் உண்டு.

நான் சிலரை பார்க்கப்போனால், “எங்கள் காலனியிலேயே சிறந்த பக்திமான் இவர்தான். இவர் இங்கிருப்பதே எங்கள் பாக்யம்” என யாராவது ஒருவரை காட்டுவர். "அவர் என்ன செய்வார்?" என்றால், "ஜாதகம் அடிக்கடி பார்ப்பார்; நவக்ரஹ ஹோமம் அடிக்கடி செய்வார்; பித்ருகாரியங்கள் தவறாது செய்வார்" என்பர். எனக்கோ அழுகையாக வரும். பக்தி கிரந்தங்களை அறியாதவர்களை பக்தர்கள் என்று சொல்லக் கேட்டால் எனக்கு வருத்தமாக இருக்கும். இவர்களுக்கும் பக்தி என்றால் என்ன என தெரியவில்லை; அவருக்கும் தெரியவில்லை. என்ன செய்வது?

**(தொடரும்....)**

